பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 07 2024 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்றத்தின் இருஅவைகளிலும் பட்ஜெட் மீதான விவாதம் இன்று தொடங்கியது.

2. மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டப்படவில்லை என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டேவிட் லாமி அரசு முறைப்பயணமாக இன்று புதுதில்லி வந்துள்ளார்.

4. தமிழகத்தில், ஐக்கிய அரபு நாடுகள் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பான மாநாடு இன்று சென்னையில் நடைபெற்றது.

5. குரேஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் --

<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பட்ஜெட் மீதான விவாதம் இன்று தொடங்கியது.

மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடப்பாண்டு பட்ஜெட்டில் எதிர்க்கட்சிகள் ஆட்சியில் உள்ள மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதே கோரிக்கையை வலியுறுத்தினர்.

இந்த விவாதத்தில் பேசிய மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்ட்ரா, பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை என்று கூறினார்.

அப்போது குறுக்கிட்டு பேசிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டப்படவில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

மக்களிடையே மத்திய அரசின் மீது ஒரு தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சிகள் இந்த குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாக அவர் தெரிவித்தார்.

பட்ஜெட்டில் ஒரு மாநிலத்தின் பெயர் இல்லை என்பதற்காக அந்த மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீடுகளோ, மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்களோ இல்லை என்று முடிவெடுப்பது தவறு என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தொடர்ந்து பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது.

<<<<<>>>>>>

பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டேவிட் லாமி, அரசுமுறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சராக பதவியேற்றபின் அவர் முதல் முறையாக இந்தியா வருகை தந்துள்ளார்.

வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால், அவரை தில்லி விமான நிலையத்தில் வரவேற்றார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒட்டுமொத்த ராஜ்ய ரீதியிலான நட்புறவை வளர்க்கும் வகையில், திரு டேவிட் லாமியின் வருகை அமையும் என்று கூறியுள்ளார்.

இந்தியாவுக்கும், பிரிட்டனுக்கும் இடையே ஒரு பாலமாக அவரது இருதரப்பு பேச்சுவார்த்தைகள் அமையும் என்று வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

நீட் இளநிலை தேர்வை ரத்து செய்துவிட்டு, மறு தேர்வு நடத்த உச்சநீதிமன்றம் மறுத்துள்ள போதிலும், எதிர்க்கட்சிகள் இதனை அரசியலாக்குவதாக பிஜேபி மூத்த தலைவர் திரு ரவிசங்கர் பிரசாத் குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒட்டுமொத்தமாக இந்த தேர்வின் நேர்மைத்தன்மை பாதிக்கப்படவில்லை என்று உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தவறான கருத்துக்களை கூறி எதிர்க்கட்சிகள் மக்களை திசை திருப்ப முயல்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

<<<<<>>>>>>

உச்சநீதிமன்றம் காலை 10 மணி முதல், மாலை ஐந்து மணிவரை செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ற வகையில், நீதிமன்ற விதிகளில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது

உச்சநீதிமன்றம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமை நீதிமன்றத்திற்கு விடுமுறை நாளாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் இந்த அறிவிப்பு அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல் நடைமுறைக்கு வருகிறது.

<<<<<>>>>>>

தமிழகத்தில், ஐக்கிய அரபு நாடுகள் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பான மாநாடு இன்று சென்னையில் நடைபெற்றது.

இதில் இரு நாடுகளை சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் பேசிய ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதாரத்துறை அமைச்சர் திரு அப்துல்லா பின் துக் அல் மரி, தமிழகத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு உகந்த சூழல் உள்ளதாக கூறினார்.

இந்தியாவின் மிக முக்கிய பகுதியில் அமைந்துள்ள தமிழகத்தில், உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம் போன்றவை மிக சிறந்த முறையில் இயங்குவதாக குறிப்பிட்டார்.

அந்நிய நேரடி முதலீடுகள் மூலம் தமிழகத்தில் பல துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ள இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு நாடுகளில், வெளிநாடுவாழ் தமிழர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளதாக கூறிய அவர், வர்த்தகம், தொழில்துறை போன்றவற்றில் ஒத்துழைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாக திரு அப்துல்லா பின் துக் அல் மரி தெரிவித்தார்.

<<<<<>>>>>

நிபா வைரஸ் பரவலை தடுக்கும் நோக்கில், கேரள எல்லைப்பகுதியான கன்னியாகுமரி மாவட்டம் களியக்கவிளையில் தமிழக சுகாதாரத்துறையினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கேரளாவிலிருந்து தமிழக எல்லைப்பகுதிக்கு வரும் அனைவருக்கும் உடல் வெப்ப பரிசோதனை செய்யப்படுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*(சவுண்ட்பைட் - குமார் - 47 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

பாதுகாப்புத்துறைக்கான ஆளில்லா விமானங்களை தயாரிப்பதற்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து உள்நாட்டு தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக இந்திய விமானவியல் சங்கத்தின் தலைவர் டாக்டர் ஜி. சத்தீஷ் ரெட்டி தெரிவித்துள்ளார்.

சென்னை **M I T** வளாகத்தில் நடைபெற்றுவரும் பாதுகாப்புத் துறைகளில் முதலீடுகள் குறித்த கூட்டத்தில் பேசிய அவர், மத்திய அரசு அனைத்துத்துறைகளிலும் உலகத்தரத்திலான உற்பத்தியை உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உபகரணங்களில் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தவும், முதலீடுகளை ஊக்குவிக்கவும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

இந்திய பாதுகாப்புத்துறையில் புதுமையை புகுத்தும் அதேநேரத்தில், பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் துறையாக செயல்படுவதற்கு நெறிமுறைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த கூட்டத்தில் பேசிய மூத்த விஞ்ஞானி டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை, விண்வெளி தொழில்நுட்பத்தில் உலக அளவில் இந்தியா நிலையான இடத்தை பிடித்துள்ளதாக கூறினார்.

அரசு மற்றும் தனியார் துறை பங்கேற்புடன் கூடிய திட்டங்கள் செயற்கைக்கோள் தயாரிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், புதிய வகை ராக்கெட்டுகளை தயாரிக்கவும், விண்வெளிப்பயணங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இளைய சமுதாயத்தினர் விண்வெளித்துறையில் அதிக ஆர்வம் காட்டி வருவதாகவும் திரு மயில்சாமி கூறினார்.

<<<<<>>>>>

குஜராத், கொங்கன், கோவா, மகாராஷ்ட்ரா ஆகிய பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஆங்காங்கே கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட மாநிலங்களில் குறிப்பாக, கங்கை சமவெளிப்பகுதிகளில் படிப்படியாக மழையின் அளவு அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமேற்கு இந்தியாவை பொறுத்தமட்டில், இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், ராஜஸ்தான், ஹரியானா, சண்டிகர், தில்லி, பஞ்சாப், மேற்கு உத்தரப்பிரதேசம் பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு பரவலாக மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் ராய்கட், சத்தாரா, மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அறிவித்துள்ள வானிலை ஆய்வு மையம், அந்த மாவட்டங்களுக்கு மிக கனமழை எச்சரிக்கையை விடுத்துள்ளது.

குறிப்பாக இந்த மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளில் அதிக அளவு மழைப்பொழிவு இருக்கக்கூடும் என்றும், சமவெளியில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தானே, ரத்னகிரி, நாசிக், புனே உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாளை முதல் மகாராஷ்ட்ரா மாநிலத்தில் படிப்படியாக மழை குறைவதற்கும் வாய்ப்புள்ளதாக வானிலை அறிக்கை கூறுகிறது.

இதனிடையே, குஜராத் மாநிலத்தில் சௌராஷ்ட்ரா உள்ளிட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மழையின் அளவு படிப்படியாக குறைந்து வருகிறது.

இம்மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்தர் பட்டேல் விமானத்தின் மூலம் பார்வையிட்ட பின்னர் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

**<<<<<>>>>>>**

நேபாள தலைநகர் காட்மாண்டு விமான நிலையத்தில் ஓடுதளத்தில் சென்ற தனியார் விமானம் விபத்துக்குள்ளானது.

இந்த விமானத்தில் 19 பேர் இருந்ததாகவும், கட்டுப்பாட்டை இழந்து ஓடுதளத்தை விட்டு விமானம் விலகி ஓடியதால் இந்த விபத்து நேரிட்டதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

குரேஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-2 என்ற செட் கணக்கில், ஸ்லோவோக்கியாவின் ஜோசப் **Kovalik** – அர்ஜென்டினாவின் **Camilo Ugo** இணையை வென்றது.

-------

தாய்லாந்தில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் பதக்கங்களை வென்ற வீரர்களுக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

--------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா இன்று குவைத்தை எதிர்கொள்கிறது.

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இரு அணிகளுக்கும் இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

-----------

ஆஸ்திரிய ஓபன் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று ஸ்பெயினின் பெட்ரோ **Martines**-ஐ எதிர்கொள்கிறார்.

----------

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் நெல்லை – திருப்பூர் அணிகள் மோதுகின்றன.

<<<<<>>>>>